**தலைப்பு 220 – ஆயுர்வேத திணைக்களம் - 2021**

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆயுர்வேத திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஆயுர்வேத திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 03 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையில் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான ஆயுர்வேத திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்பட்டுள்ளது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய

வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு
---------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) இவ்வறிக்கையின் 1.6.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடைபெறு வேலைகள் ரூபா 836,749,569 தொகை மற்றும் அத்திகதியில் உள்ளவாறு குறிப்பிட்ட செலவு விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள உபகரணங்கள் கொள்வனவு ரூபா 14,900,000 தொகை, முன்னைய ஆண்டின் நிதி அல்லாத சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருக்காமையால் அந்த செலவு மீளாய்வாண்டிற்காக ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களில் ஆரம்ப மீதிகளுடன் கூட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட திருந்தங்கள் தொடர்பாக கணக்கு குறிப்புகளில் பதிவேடு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஸிகாஸ் கணினி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் சொத்துக்களை கணக்கீடு செய்யும் போது பதிவு செய்தல் தவறு ஒன்று ஏற்பட்டிருந்ததென மற்றும் அதனை நாட்குறிப்புப் பதிவு மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததென. | ஸிகாஸ் கணினி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் சொத்துக்களை கணக்கீடு செய்யும் போது பதிவு செய்தல் தவறு ஒன்று நாட்குறிப்பு பதிவு மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டன என அறிவித்திருந்த போதிலும், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் படி ஆரம்ப மீதிகளின் திருத்தங்கள் தொடர்பாக கணக்கு குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த அலுவலகத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் ரூபா 4,697,345 தொகை குறிப்பிட்ட செலவு விடயத்திற்கு வரவு வைத்திருந்த போதிலும் நிதி அல்லாத சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை. | ஸிகாஸ் கணினி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் சொத்துக்கள் கணக்கீடு செய்யும் போது பதிவு செய்தல் தவறு ஒன்று ஏற்பட்டிருந்திருந்ததெனவும், தற்போது நாட்குறிப்புப் பதிவின் மூலம் திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டது என. | தவறுகளை சரி செய்வதற்கும், திறைசேரி அச்சுப் பதிவு மற்றும் திணைக்கள ஏடுகளுடன் தொடர்ச்சியாக இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் இவ்வாறான குறைபாடுகளை தவிர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மூலதனச் சொத்துக்களை தனதாக்கலின் கீழ் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்தல் என்ற செலவு விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 67,500,000 இற்கான குறைநிரப்பு ஏற்பாடுகளில் இருந்து ரூபா 11,809,305 தொகை தளபாட உபகரணங்கள் கொள்வனவிற்காக செலவிடப்பட்டிருந்தது. | பாதீட்டு பிரேரணைகளின் கீழ் மேலதிக ஏற்பாடுகள் பெற்றுக்கொள்வதற்காக ஆயுர்வேத வைத்தியசாலைகளின் தேவைப்பாடுகளின் ஆவணமொன்று சமர்ப்பிக்கப்பட்டது எனவும், இதற்காக மேலதிக ஏற்பாடுகள் வழங்கும் போது மூலதனச் சொத்துக்கள் தனதாக்கல் - இயந்திர மற்றும் இயந்தி உபகரணங்கள் கொள்வனவு செய்தல் என்ற செலவு விடயங்களின் கீழ் அனைத்து தேவைகளுக்குமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததென மற்றும் அதன்படி ஆதார வைத்தியசாலைத் தேவைகள் நிறைவேற்றிக்கொள்வதற்கான தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டதென. | ஏற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்காக தளபாட உபகரணங்கள் தேவைப்பாட்டு ஆவணம் ஒன்று திறைசேரிக்கு சமர்ப்பித்திருக்காமையால் செலவுகள் மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் வைத்தியசாலைகளில் இருந்து தேவைப்பாடுகளின் ஆவணம் ஒன்று பெற்றுக்கொண்டிருந்த போதிலும் பண்டங்கள் விநியோகிக்கும் போது அநேகமாக அது தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்காமையாலும், செலவுகளின் தன்மையின் படி ஏற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கு மற்றும் செலவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

1.6.2 கணக்காய்விற்காக சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கட்டிடத் திணைக்களம் மற்றும் மாவட்ட செயலாளர்களுக்கு சாட்டப்பட்டிருந்த ஏற்பாடுகளின் கீழ் செலவிடப்பட்டிருந்த ரூபா 204,055,596 தொகைக்குரிய கருமங்களை நிறைவேற்றல் தொடர்பாக திணைக்களத்தினால் மேற்பார்வை செய்திருக்காமை, தொடர் நடவடிக்கை எடுத்திருக்காமை மற்றும் செலவுகளுக்குரிய விபரங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை ஆகிய காரணங்களினால் அந்தக் கொடுக்கல் வாங்கல்களை திருத்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாமல் இருந்தது. | செலவிடப்பட்டுள்ள தொகைக்குரிய செலவுகள் திறைசேரிப் பொழிப்பின் மூலம் உரிய முறையில் சொத்துக்கள் பேரேட்டுக்களில் பதிவு செய்யப்பட்டதென. | ஏனைய திணைக்களங்களின் மூலம் நிறைவேற்றப்படக் கூடிய மூலதனச் செயற்திட்ட கருமங்கள் உரிய முறையில் மேற்பார்வை செய்வதற்கும், முன்னேற்றம் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கும் போதியளவு பதிவுகள் அறிக்கைகள் பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 891(1) இற்கு இணங்க பிணை வைப்புப் பதிவேடு நாளதுவரை ஆக்கப்படவில்லை. | எதிர் காலத்தில் பிணை வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்களிடம் பிணையைப் பெற்றுக்கொண்டு சரியாக பிணைப் பதிவேடு நாளதுவரை ஆக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க முறைப் பிரகாரம் பிணைப் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |
| (ஆ) | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அது நிதிப் பிரமாணம் 110 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்துக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்காததுடன், அதனை நாளதுவரை ஆக்கப்பட்டும் இருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 110 இல் குறிப்பிடப்பட்டுள்ள நட்டங்கள் சேதங்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டு நாளதுவரை ஆக்கப்பட்டு பேணிச் செல்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க முறைப் பிரகாரம் நட்டங்கள் சேதங்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். |

2 நிதி மீளாய்வு

2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 மூலதனச் செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 15,500,000 தொகைக்கான ஒட்டுமொத்த மதிப்பீட்டு ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்ததுடன், 07 மூலதனச் செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 34,600,000 இற்கான ஏற்பாடுகளில் ரூபா 26,734,376 தொகை எனப்படும் 57 சதவீதத்திற்கும் மூதல் 92 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | கொரோனா தொற்றுநோய் நிலைமை மற்றும் இறக்குமதிகள் வரையறுக்கப்படல், பெறுகை அலுவல்கள் செயற்படுத்துவதற்கு முடியாமல் போதல் ஆகிய காரணங்களினால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்ததென. | திணைக்களத்தின் பணிப் பொறுப்பு, முன்னைய ஆண்டுகளின் செலவுகளின் போக்குகள், சந்தை மற்றும் ஏனைய சுற்றாடல் காரணிகளை கவனத்தில் எடுத்து நிதிப் பிரமாணம் 50 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க முடிந்த அளவு சரியான மற்றும் தத்துரூபமா செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 02 மூலனதச் செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 15,000,000 இற்கான ஏற்பாடுகளில் ரூபா 6,738,981 இற்கான ஏற்பாடுகள் வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன், ரூபா | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | 7,288,520 இற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. | | |
| (இ) | 04 மூலதனச் செலவு விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 277,000,000 இற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ரூபா 181,744,101 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | குறைநிரப்பு மதிப்பீட்டின் கீழ் அத்தியவசியமான மற்றும் குறிப்பிட்ட மூலதனச் செயற்திட்டங்களுக்காக ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு அவற்றில் மூன்றில் இரண்டு மிகையான ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமை நிதி முகாமைத்துவத்தின் பலவீனம் ஒன்றாக காணப்படுவதால் அது தொடர்பாக தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | மருத்துவ வழங்கல்களின் கீழ் 02 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 130,000,000 இற்கான ஏற்பாடுகளில் இருந்து ரூபா 42,879,976 தொகை அந்தச் செலவு விடயங்களின் குறிக்கோள் சார் கருமங்களுக்காக செலவிடப்படாமல் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன், ரூபா 15,226,152 இற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. | நாவின்ன மற்றும் பொரளை ஆயுர்வேத வைத்தியசாலைகள் கொரோனா இடைக்கால சிகிச்சை நிலையங்களாக நிறுவப்பட்டமையால் வழமையான நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கப்படாமையின் காரணத்தினால் மருந்து வகைகள் குறைவாக கட்டளையிடப்பட நேரிட்டிருந்தமையால் மருந்துகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டதெனவும் மற்றும் மேலதிக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட வேண்டிய செலவு விடயங்களில் சேமிப்பு எதிர்பார்க்கப்பட்ட செலவு விடயங்களில் இருந்து ஏற்பாடுகள் மாற்றப்பட்டதென. | திணைக்களத்தின் பணிப் பொறுப்பு, முன்னைய ஆண்டுகளின் செலவுகளின் போக்குகள், சந்தை மற்றும் ஏனைய சுற்றாடல் காரணிகளை கவனத்தில் எடுத்து நிதிப் பிரமாணம் 50 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க முடிந்த அளவு சரியான மற்றும் தத்துரூபமா செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | மீண்டுவரும் செலவு விடயம் ஒன்றிற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 245,000,000 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ரூபா 103,712,290 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | அமைச்சரவை அங்கீகாரத்தின் மீது கொரோனா தொற்றுநோயை தடுப்பதற்காக பொதுமக்களுக்கு இலவசமாக மருந்துப் பேழை ஒன்று வழங்குவதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட உற்பத்திக் கிரயத்தின் படி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட போதிலும் சந்தையின் கூறுவிலைகள் அழைக்கும் போது அந்தக் கிரயத்தை விட குறைந்த கிரயத்திற்கு அந்தக் கருமத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக முடியுமானமையால் இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்ததென. | - மேற்படி - |

2.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் (iii) என சமர்ப்பிக்கப்படுகின்ற பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருந்த ரூபா 24,776,561 இற்கான பொறுப்புக்கள், நிதிப் பிரமாணம் 94(2) மற்றும் 94(3) இணங்க குறிப்பு இலக்கம் (iv) என சமர்ப்பிக்கப்பட்டிருந்த அணுகியிருந்த ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றிலும் உட்படுத்தப்பட்டிருந்தது. | இந்தத் தவறினை அடுத்த வருடத்தில் சரி செய்வதற்காக உரிய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என. | நிதிப் பிரமாணம் 94(1) ஏற்பாடுகளின் கீழ் இனங் காண வேண்டிய பொறுப்புக்கள் வருடாந்தம் மீண்டுவரும் தன்மை உடைய சேவைகள் அல்லது வழங்கல்களுக்காக அணுகும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் மொத்தக் கிரய மதிப்பீட்டின் மீது ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் என வெவ்வேறாக இணங் கண்டு குறிப்பிட்ட படிவத்தின் படி அறிவிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கட்டளையிடப்பட்டு கொள்வனவு செய்யும் உடன்படிக்கைகளுக்கு அணுகியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 திகதி வரை கிடைத்திருக்காத வைத்தியசாலை தளபாடங்களின் கிரயம் ரூபா 4,203,756 தொகை மற்றும் கணினி மற்றும் துணைக் கருவிகளின் கிரயம் ரூபா 28,110,150 தொகை, நிதக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் (iv) என சமர்ப்பிக்கப்படும் அணுகியிருந்த ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அடுத்த கணக்காண்டிற்காக அணுகிய ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் (iv) என சமர்ப்பிக்கப்படும் அணுகிய ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உட்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | அடுத்த கணக்காண்டிற்காக அணுகிய ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் (iv) என சமர்ப்பிக்கப்படும் அணுகியிருந்த ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உட்படுத்தப்பட வேண்டும் என. |

2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

| அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை | | |
| (அ) | 1961 இன் 31 இலக்க ஆயுர்வேத சட்டத்தின் பிரிவு 10 | ஆயுர்வேத வைத்தியசாலைகள், ஆயுர்வேத மருந்து உற்பத்தி நிலையங்கள், ஆயுர்வேத மருந்தகங்கள் அல்லது ஆயுர்வேத மருந்துக் களஞ்சியங்கள் ஆயுர்வேத ஆணையாளரினால் பதிவு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், பஞ்ச கரும மற்றும் மஸாஜ் | ஆயுர்வேத சட்டத்திற்கு இணங்க ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்று, ஆயுர்வேத மருந்து உற்பத்தி நிலையம் ஒன்று, ஆயுர்வேத மருந்தகம் ஒன்று அல்லது ஆயுர்வேத மருந்துக் களஞ்சியம் ஒன்றினை மாத்திரம் ஒழுங்குறுத்த முடியும் | பஞ்ச கரும மற்றும் மஸாஜ் நிலையங்களை ஒருங்குவடுத்துவதற்காக முறையான சட்டச் சட்டகம் ஒன்று ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிலையங்கள் பதிவு செய்தல் தொடர்பாக ஏற்பாடுகளை சட்டத்தில் உட்படுத்தியிருக்காமையால் பஞ்சகரும வைத்திய முறை பயன்பாட்டினை ஒழுங்குருத்துவதற்கு முடியாமல் இருந்தது. | எனவும், மற்றும் மஸாஜ் நிலையங்கள் அந்த வகையை சேர்ந்தவையல்ல என அமைச்சுச் செயலாளரின் கட்டளை மீது சுற்றுலாச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலாதாரர்களை கவரும் நிறுவனங்களுக்காக மாத்திரம் பதிவு செய்தல் வழங்குதல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என. | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 103 | மொத்த நட்டம் ரூபா 165,850 தொகைக்கான 04 வாகன விபத்துக்களுக்குரிய ரூபா 101,600 தொகை காப்புறுதி நட்டஈடிலிருந்து அணவல் செய்திருந்த போதிலும் அந்த விபத்துக்கள் தொடர்பாக நி.பி. 103(1) இன் (இ), (ஈ), (உ), (ஊ), (எ) மற்றும் (ஏ) இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 104(4) இற்கு இணங்க விசாரணைகள் மேற்கொள்வதற்காக 2021 ஆண்டின் விபத்துக்கள் தொடர்பான கோவைகள் குழுவிற்கு சமர்பிக்கப்பட்டிருந்ததெனவும் மற்றும் இது வரை அந்த அறிக்கை கிடைத்திருக்கவில்லை என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 371(ஆ) | நிமித்த துணைக் கட்டுநிதி குறிப்பிட்ட கருமம் நெருங்கிய தினம் ஒன்றில் பெற்றுக்கொண்டு அந்த கருமம் பூர்த்தி செய்யப்பட்டவுடன், தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், கருமம் ஆரம்பிப்பதற்கு 02 நாட்களுக்கும் 10 நாட்களுக்கும் இடைப்பட்ட காலத்திற்கு முன்னர் 11 சந்தர்ப்பங்களில் 03 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 218,960 இற்கான நிமித்தத் துணைக் கட்டுநிதி வழங்கப்பட்டிருந்ததுடன், 19 சந்தர்ப்பங்களில் பெண் உத்தியோகத்தர் ஒருவரினால் பெற்றிருந்த ரூபா 407,200 இற்கான நிமித்தத் துணைக் கட்டுநிதி மற்றும் மீதித் தொகையை தீர்ப்பதற்கு 11 | ITMIS நிகழ்வு நிலை நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் உட்படுத்தப்படும் உறுதிச் சீட்டுக்களுக்காக திறைசேரியில் இருந்து பணம் பெற்றுக்கொள்வதற்கு முற்பண விண்ணப்பிக்கும் கோரிக்கை உறுதிச் சீட்டு இரண்டு வாரங்களுக்கு முன்னர் கணினி முறைமைக்கு உட்படுத்தப்பட வேண்டியிருந்தமையால் முற்பணப் பதிவேட்டில் குறிப்பிட்ட நாட்களுக்கு முன்னர் உட்படுத்துவதற்கு நேரிட்டிருந்தது என. | உத்தியோகத்தர்களுக்கு பணம் வழங்கிய திகதியை அடிப்படையாகக் கொண்டு அவதானிப்புக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், சமர்ப்பிக்கப்பட்டிருந்த கருத்துரைகள் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நாட்களுக்கும் 123 நாட்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்தது. | | |
| | (iii) நிதிப் பிரமாணம் 770(4) | ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டு பல வருடங்கள் கடந்திருந்த 02 கப் வண்டிகள், பஸ் வண்டி ஒன்று, 05 மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை திருத்த வேலைகள் மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆயுர்வேத திணைக்களத்திற்கு சொந்தமான ஓட்ட நிலைமையில் காணப்படாத 02 கப் வண்டிகள், 01 பஸ் வண்டி மற்றும் 04 மோட்டார் சைக்கிள்கள் சுகாதார அமைச்சின் வாகனங்களுடன் அப்புறப்படுத்துவதற்காக 2022 பெப்ரவரி 14 திகதி சுகாதார அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதென மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள் சுதேச மருத்துவ அமைச்சிற்கு உரித்தானதால் அது தொடர்பாக அமைச்சுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| | (iv) நிதிப் பிரமாணம் 756(6) | மீளாய்வாண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு அலுவல்கள் 2022 மார்ச் 15 திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 மே 15 திகதி அளவிலும் அந்த அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கொரோனா தொற்றுநோய் நிலைமை மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அநுராதபுரம் சமூக சுகாதார மேம்பாட்டு அலுவலகங்கள், மதவச்சி சிறுநீரக வைத்தியசாலை, மிகிந்தலை ஆயுர்வேத வைத்தியசாலை, கன்எலிய மூலிகைத் தோட்டம் ஆகிய இடங்களில் பண்டக் கணிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்படவில்லை எனவும், பொரளை தேசிய வைத்தியசாலையில் பண்டக் கணிப்பீட்டு அலுவல்கள் பூர்த்தி செய்யக்கூடிய நிலைமையில் இருப்பதெனவும், ஏனைய நிறுவனங்களில் 2021 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன என. | - மேற்படி - |
| (இ) | 2016 திசெம்பர் 29 திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின் | அரசாங்க வாகனங்களின் அனைத்து எரிபொருள் பரிசோதனையின் பின்னர் 12 மாத கால வரையறையின் பின்னர் அல்லது 25,000 கிலோ | ஆயுர்வேத திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பந்தி 3.1 | மீற்றர் ஓடிய பின்னர் அல்லது என்ஜின் தொடர்பாக பிரதான திருத்த வேலையின் பின்னர் ஆகிய விடயங்களிடையே முதலில் ஏற்படும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் எரிவுப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தின் வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேற்கொள்வதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் நாட்டில் காணப்படும் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் எரிபொருள் விலை அதிகரிப்பு ஆகிய காரணத்தினால் இந்தப் பரிசோதனைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன என. | |
| (ஈ) | 2019 ஏப்ரல் 16 திகதிய இலக்கம் 09/2009 கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பந்தி 2(iv) | நேரத்தை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேர மற்றும் விடுமுறை நாள் சம்பளம் கொடுப்பனவு செய்யும் போது குறிப்பிட்ட காலத்தை விரலடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதும் விரலடையாள இயந்திரத்தை பயன்படுத்தாமல் தின வரவுப் பதிவேட்டை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளம் என ரூபா 55,335,614 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 2020 ஆண்டில் ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் காணப்படும் அனைத்து நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலைகளில் விரலடையாள இயந்திரங்கள் பொறுத்தப்பட்டிருந்த போதிலும், சுகாதார அமைச்சினால் விரலடையாள இயந்திரம் பயன்படுத்தப்படாமையால் ஆயுர்வேத திணைக்களத்திலும் அவ்வாறு மேற்கொள்ள வேண்டிய தேவையில்லை என அமைச்சுச் செயலாளர் அறிவித்திருந்தமையால் 2021 ஆண்டில் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளக் கொடுப்பனவுகளுக்காக விரலடையாள இயந்திரப் பதிவுகளை அடிப்படையாகக் கொள்ளவில்லை என. | பொது நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

2.4 முற்பணக் கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தாபனக் கோவையின் XXIV ஆவது அத்தியாயத்தில் பிரிவுகள் 1.6, 1.7 மற்றும் 6.3 மற்றும் 2004 ஒக்தோபர் 11 திகதிய 118 இலக்கம் கொண்ட தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பந்தி 1.1.7 இற்கு இணங்க, இடமாற்றம் பெற்றுச் செல்லும் உத்தியோகத்தர்களின் கடன் | இந்த உத்தியோகத்தர்களிடையே அநேகமானோர் அவர்கள் மாற்றம் பெற்றுச் சென்றுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் கடமையில் ஈடுபட்டிருக்கவில்லை என அந்த நிறுவனங்களினால் அறிவிக்கப்பட்டிருந்தது எனவும், அவர்கள் உண்மையாகவே இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள | தாபனக் கோவையின் மற்றும் தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டியிருந்ததுடன், அவ்வாறு செயற்படும் பொறுப்பினை |

| | | | |
|---|---|---|---|
| | மீதிகளை மூன்று மாதங்களுக்குள் தீர்த்துக்கொள்ள வேண்டியிருந்த போதிலும், இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 10 உத்தியோகத்தர்களின் 2021 திசெம்பர் 31 திகதியிலுள்ளவாறு 05 வருட காலப் பகுதியை மிகைத்துள்ள தீர்க்கப்பட்டிருக்காத கடன்மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 316,249 தொகையாக இருந்தது. | நிறுவனங்கள் தொடர்பாக தகவல்களை கண்டறிந்தவுடனே தாபனக் கோவையில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு செயற்படுவேன் என. | நிறைவேற்றாத உத்தியோகத்தரிடம் இந்தத் தொகையை அறவீடு செய்வதற்கு நிதிப் பிரமாணம் 104(2) ‘‘ஆ’’ இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | தாபனக் கோவையின் XLVIII அத்தியாயத்தின் பிரிவு 21.3 இற்கு இணங்க வேலை இடைநிறுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடைமுறையிலுள்ள ஒழுக்காற்று விசாரணைகள் அலுவல்கள் முடிந்தளவு தாமதம் இன்றி பூர்த்தி செய்தல் அத்தியவசியமாக இருந்த போதிலும், சேவை இடைநிறுத்தப்பட்டு 01 வருடத்திற்கும் 03 வருடங்களுக்குமிடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், 04 உத்தியோகத்தர்களிடம் ரூபா 198,885 தொகையும், 05 வருட காலத்தை மிகைத்துள்ள 06 உத்தியோகத்தர்களின் ரூபா 198,260 தொகை அறவீடு செய்வதற்கு முடியாமல் இருந்தது. | 2022 மே மாதம் அளவில் 02 உத்தியோகத்தரிடம் ரூபா 37,970 தொகை அறவீடு செய்யப்பட்டது என. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | தாபனக் கோவையின் XXIV அத்தியாயத்தின் பிரிவு 4.2.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வு பெறுவதற்கு தீர்மானித்திருந்த போது அவரின் அறவிடப்பட வேண்டிய அனைத்து கடன் தொடர்பான விபரங்களும் ஓய்வூதியப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், பிரிவு 4.2.5 இற்கு இணங்க உத்தியோகத்தரின் மாற்றியமைக்கப்பட்ட ஓய்வூதியத்தில் இருந்து அல்லது பணிக்கொடையிலிருந்து அறவீடு செய்ய வேண்டும். 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வுபெற்று 3 மாதத்தை கடந்துள்ள 18 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட | 2022 மே மாதம் அளவில் 06 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 575,815 தொகை அறவீடு செய்யப்பட்டது என. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்த மொத்த கடன் மீதி ரூபா 1,429,037 தொகையாக காணப்பட்டதுடன் அந்த கடனை அறவீடு செய்வதற்காக தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் அல்லது அதற்கான வேறு காரணங்கள் காணப்படுகின்றனவா எனவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>அந்தக் கடன் மீதிகளில் 03 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த 04 வருடங்களை விட பழமை வாய்ந்த ரூபா 62,050 தொகையும் காணப்பட்டது. | | |
| (ஈ) | 2019 ஜுன் 27 திகதிய 05/2019 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 3(உ)(ii) இணங்க சேவையை விட்டு சென்றிருந்த ஆனால் மீண்டும் சேவையில் நிறுவியிருக்காத உத்தியோகத்தர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை தேர்தல் ஆணையாளருக்கு சமர்ப்பித்து வதிவு தொடர்பான விபரங்களை வினவி பிரதேச செயலாளர் ஊடாக அந்த உத்தியோகத்தர்களின் சொத்துக்கள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் சட்டமா அதிபரின் ஊடாக கடன் தொகை அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2021 திசெம்பர் 31 திகதியளவில் சேவையை விட்டுச் சென்று 03 மாதங்களை மிகைத்திருந்த 23 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த மொத்த கடன் மீதி ரூபா 1,207,060 தொகை அவ்வாறு அறவீடு செய்திருக்காததுடன் அவற்றில் 68 சதவீதம் எனப்படும் ரூபா 825,560 தொகை 05 வருடங்களை விட மிகையான காலம் பழமை வாய்ந்த கடன் மீதிகள் ஆகும். | சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தொடர்பாக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் தனிப்பட்ட கோவைகளில் காணப்படும் குறைபாடுகள், முன்னைய கடன்பட்டோர் பகுப்பாய்வுகளில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்கள் சரியானவையாக காணப்படாமை மற்றும் குறிப்பிட்ட காலப் பகுதியில் கடன் மீதிகள் தீர்கப்படாமை ஆகிய விடயங்களின் காரணத்தினால் தொடர்ந்தும் தாமதம் ஏற்படல் நேரிட்டிருந்தது எனவும் எதிர்காலத்தில் முன்னேற்றத்தை அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பொரளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலையின் மருந்து உற்பத்தி பிரிவின் மூலம் 23 வகையான தைலங்கள் 13,500 போத்தல்கள் மற்றும் 08 வகையான குக்குல் 790 கிராம் உற்பத்தி செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பதவியணி பற்றாக்குறை மற்றும் மருந்து மூலிகைகள் போதியளவு பெற்றுக்கொண்டிருக்காமை ஆகிய காரணத்தினால் 09 வகையான தைலங்களில் 2,977 போத்தல்கள் மற்றும் 07 வகையான குக்குல் 268 கிராம் தொகையும் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. | எதிர்கால உற்பத்தி அலுவல்களை திட்டமிடும் போது திணைக்களத்தில் காணப்படும் பௌதீக மற்றும் மனிதவள கொள்திறன்களை கவனத்தில் எடுத்து மதிப்பீடுகள் தயாரிப்பதற்காக குறிப்பிட்ட பிரிவுத் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து தெரிவிக்கப்பட்டவாறு நடவடிக்கை எடுத்து வளங்களின் மூலம் உச்ச மட்ட பயனை பெற்றுக் கொள்ளக் கூடியவாறு திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) திணைக்களத்தினால் நிதிக் கூற்றுக்களுடன் 2021 வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் வரைபு ஒன்று சமர்ப்பித்திருந்த போதிலும் அது 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 10.2 இன் கீழ் பொது நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்க சரியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 10.2 இன் கீழ் பொது நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த வழிகாட்டல் இலக்கம் 14 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் எதிர்காலத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை சரியாக தயாரிப்பதற்காக உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது என. | 2022 ஆண்டு முதல் தொடர்ந்து வருடாந்த கணக்குகளுடன் சரியான படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டு வருடாந்த அறிக்கையின் வரைபு ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்க ஆயுர்வேத திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2020 ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை 2022 மே 30 திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | பொது நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

3.3 பெறுகைகள்

-------------------

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ரூபா 20,799,715 தொகை மொத்த கிரயத்தை உடைய 23 விடயங்களைக் கொண்ட அலுவலக தளபாட 1239 அலகுகள் மற்றும் மொத்த கிரயம் ரூபா 6,987,850 தொகைக்கான வைத்தியசாலை தளபாடங்கள் 312 அலகுகள் மாத்தளை பிரதேசத்தை சேர்ந்த வழங்குனர் ஒருவரிடம் இருந்து கொள்வனவு செய்திருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருத்தல், அலுவலக தளபாட உபகரணங்கள் தொடர்பாக நியமனம் செய்யப்பட்டிருந்த தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவில் விடயத்திற்குரிய விஷேட அறிவையுடைய ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை, விவரக் குறிப்புகள் தயாரித்தல் மற்றும் அந்த விவரக் குறிப்புகளுக்கு இணங்க உபகரணங்கள் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்காமை, அனைத்து உபகரணங்களும் விவரக் குறிப்புக்களுக்கு இணங்க கிடைக்கப் பெற்றதற்கான முறைப் பிரகாரம் உறுதி செய்து கொள்ளாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருத்தல், கட்டளை சமர்ப்பிக்கப்பட்ட | ஒவ்வொரு பிரிவுகளில் இருந்தும் கிடைத்திருந்த எழுத்துமூல கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு தேவைப்பாட்டு பதிவேடு தயாரிக்கப்பட்டது எனவும், வைத்தியசாலை தளபாடங்கள் கொள்வனவு செய்யும் போது விடய விஷேடத்துவர் ஒருவர் தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கு நியமனம் செய்யப்பட்டிருந்தது எனவும், அனைத்து உபகரணங்களும் விவரக் குறிப்புகளுக்கு அமைவாக காணப்பட்டது என பௌதீக ரீதியாக பரிசோதனை செய்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது எனவும், அப்போது நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் காரணமாக மற்றும் மூலிகைகள் பற்றாக்குறை காரணத்தினால் பண்டங்கள் வழங்கள் தாமதம் அடைந்தததற்காக தாமதக் கட்டணம் அறவீடு செய்திருக்காமை எனவும் மற்றும் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் மேற்கொள்ளக் கூடாது என குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என. | பெறுகை வழிகாட்டலை சரியாக கடைபிடிக்கப்பட்டது என மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட்டதனை உறுதிப்படுத்துவதற்காக எழுத்துமூல சான்றுகள் பேணிவந்து பெறுகைகள் நெறிப்படுத்தப்பட வேண்டும். |

எண்ணிக்கையை விட கூடுதலாக வழங்கப்பட்டிருந்த உபகரணங்களுக்காக கொடுப்பனவு செய்தல், கட்டளையிடப்பட்ட உபகரணங்களை விட வித்தியாசமான உபகரணங்களை ஏற்றுக் கொள்ளல் மற்றும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளல், தாமதக் கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருக்காமை மற்றும் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்காத செலவு விடயங்களின் கீழ் ரூபா 11,809,305 தொகை கொடுப்பனவு செய்தல் ஆகிய குறைபாடுகள் இந்த பெறுகை செய்முறையில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) சுதேச மருந்து வகைகள் மூலம் கொவிட் 19 தொற்றுநோயை கட்டுப்படுத்துவதற்காக ஒன்று ரூபா 1,000 கிரயத்தையுடைய 60 இலட்சம் சுவதாரணி மருந்துப் பேழை விநியோகிக்கும் செயற்திட்டத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. ஆரம்பத்தில் மேல் மாகாணத்திற்கு 250,000 மருந்து பேழைகள் வழங்குவதற்காக குறைநிரப்பு மதிப்பீடு ரூபா 250,000,000 ஒதுக்கப்பட்டு அவற்றிலிருந்து ரூபா 142,562,809 தொகை செலவிடப்பட்டிருந்தது. மருந்துப் பேழைகள் தயாரிக்கும் அனைத்துக் கருமங்களும் ஒரு வழங்குனரிற்கு கொடுக்கக்கூடிய விதமாக கூறுவிலைகள் அழைப்பதற்காக எடுக்கப்படும் காலம் உற்பத்திகளின் தரத்தில் விரயம் மற்றும் கிரயத்தை குறைத்துக்கொள்ளல் ஆகியவற்றில் கவனம் செலுத்தாமல் மருந்து மற்றும் கூழ் உற்பத்திக்கு 07 வழங்குனர்களும், பொதிகள் அச்சிடுவதற்கு ஒரு வழங்குனரும், காட்போட் பெட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் அச்சிடுவதற்காக ஒரு வழங்குனரும், மருந்து மற்றும் கூழ் பொதி செய்வதற்காக 07 வழங்குனர்களுமாக வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தது. மேலும், கூறுவிலைகளை மதிப்பாய்வு செய்யும் போது காணப்பட்ட பல்வேறு

விலைகூறல்களை மதிப்பாய்வு செய்யும் போது காணப்பட்ட குறைபாடுகளை கொடுப்பனவு செய்ய முன்னர் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் மற்றும் அச்சிடப்பட்ட காலவதியாகும் திகதி சிக்கல் தன்மை ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டதெனவும், மேற்பார்வை மற்றும் தொடர் செயல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதெனவும், கொவிட் நோய் நிலைமையின் காரணமாக கம்பஹா மாவட்டத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டதெனவும், ஏனைய மாவட்டங்களை இயன்றளவு அணவல் செய்யப்பட்டதெனவும், மற்றும் செயற்திட்டத்தின் குறிக்கோளை நூறு சதவீதம் நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் போனது எனவும்.

அரசாங்க பணம் சிக்கனமாக பயன்படுத்தி அத்தியவசியமான மற்றும் முக்கியமான குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக மாத்திரம் செயற்திட்ட யோசனைகளை செயற்படுத்த வேண்டியதுடன், பெறுகை வழிகாட்டல்களை சரியாக கடைபிடித்து மற்றும் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தி பெறுகை அலுவல்களும் மேற்கொள்ள வேண்டும்.

குறைபாடுகளை பின்னர் நிவர்த்தி செய்யும் அடிப்படையில் வழங்குனர்கள் தெரிவு செய்தல் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரைக்கு கவனம் செலுத்தாமல் செயற்படுதல், அனைத்துப் பெறுகைகளையும் குறிப்பிட்ட நாளில் பூர்த்தி செய்யாமை, பெறுகைக் குழுவின் அங்கீகாரம் இன்றி கால நீடிப்பு செய்தல், தாமதக் கட்டணம் அறவிடப்படாமை, விலைக்குழுவின் கூறுவிலைகளை மிகைத்து கொடுப்பனவு செய்தல் ஆகிய குறைபாடுகள் இந்தப் பெறுகை செய்முறையில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. மருந்துப் பேழை சுகாதாரப் பாதுகாப்புடன் களஞ்சியப்படுத்தப்படாமை, முறைசாரா விதமாக விநியோகித்தல், மருந்துகளை நிரப்புவதற்கு முன்னர் பொதிகளில் காலவதியாகும் நாளை அச்சிட்டிருந்தமையால் சில மருந்துகள் காலவதியானவை என கணித்து அப்புறப்படுத்தல், காலவதியாக முன்னர் மருந்துகளை பயன்படுத்துவற்கு போதியளவு காலம் ஒன்று நலன்பெறுவோருக்கு கிடைத்திருக்காமை, இலக்காகிய நலன்பெறுவோருக்கு மருந்துகள் கிடைத்தல் மற்றும் பயன்படுத்தல் தொடர்பாக கண்காணிப்பு மற்றும் தொடர் நடவடிக்கை எடுக்காமை, மேல் மாகாணத்திற்கு விநியோகிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த 250,000 பேழைகளில் 183,776 உம் கம்பஹா மாவட்டத்திற்கு மாத்திரம் விநியோகித்தமை, 60 நாட்களுக்குள் 60 இலட்சம் பேழைகளை விநியோகிப்பதற்காக அவசர பெறுகைமுறையை கடைபிடிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 122 நாட்கள் கடந்திருந்த போதிலும் செயற்திட்டத்தின் மூலம் 05 சதவீதத்தையேனும் பூர்த்தி செய்திருக்காமை ஆகிய குறைபாடுகள் இந்த பெறுகையில் காணப்பட்டதென மேலும் அவதானிக்கப்பட்டது.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் தலைமை அலுவலக வளாகம், பொரளை போதனா வைத்தியசாலை உட்பட வைத்தியசாலைகள், மூலிகைத்தோட்டங்கள், சமூக சுகாதார பிராந்திய அலுவல்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் ஆகிய 17 காணிகளை திணைக்களத்திற்கு உரித்தாக்கியிருக்கவில்லை. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது இந்தக் காணிகளில் புதிய நிர்மாண வேலைகளுக்காக ரூபா 21,059,428 தொகை பராமரிப்பு அலுவல்களுக்காக ரூபா 29,274,335 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் தலைமை அலுவலக வளாகம், வைத்தியசாலைகள், மூலிகைத் தோட்டங்கள், சமூக சுகாதார பிராந்திய அலுவலகங்கள், சுற்றுலா விடுதிகள் திணைக்களத்திற்கு உரித்தாக்கியிருக்காத போதிலும், அத்தியவசியமான பராமரிப்பு அலுவல்கள் மேற்கொள்வதற்கு பணம் செலவிடப்பட்டதெனவும் மற்றும் இந்தக் காணிகளின் உரிமையை திணைக்களத்திற்கு உரித்தாக்கிக் கொள்வதற்காக தேவையான ஆரம்ப அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததென. | குறிப்பிட்ட காணிகளை உரித்தாக்கும் அலுவல்கள் விரைவுபடுத்த வேண்டும். |
| (ஆ) | லீஸிங் தவணைப் பண செலுத்தல் அடிப்படையில் 2012 ஆண்டின் போது டொயோடா லங்கா நிறுவனத்தில் இருந்து கொள்வனவு செய்திருந்த மொத்தக் கிரயம் ரூபா 8,400,000 தொகைக்கான வேன் வண்டி ஒன்று லீஸிங் காலம் முடிவடைந்த பின்னர் திணைக்களத்திற்கு உரித்தாக்கியிருக்கவில்லை. | இந்த வாகனத்தின் உரிமையை ஆயுர்வேத திணைக்களத்திற்கு உரித்தாக்கித் தரும்படி கோரிக்கையொன்று 2018 ஒக்தோபர் 09 திகதி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது எனவும், கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் பல வாகனங்களின் உரித்தாக்கல்கள் அலுவல்கள் சேகரமாகியிருந்த காரணத்தினால் இந்த உரித்தாக்கல் தாமதம் அடைந்ததெனவும் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்ததென மற்றும் எதிர் காலத்தில் உரிய அலுவல்கள் மேற்கொள்வதற்கு தீர்மாணிக்கப்பட்டுள்ளது. | வேன் வண்டியின் உரிமையை திணைக்களத்திற்கு உரித்தாக்குவதற்காக தாமதம் இன்றி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2017 ஜுன் 28 திகதிய 01/2017 இலக்கம் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கைக்கு இணங்க சொத்துக்கள் கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பாக தகவல்கள் கொம்டோலர் ஜெனரால் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றேன் என. | குறிப்பிட்ட காலப் பகுதியில் உரிய அறிக்கைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

3.5 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மங்சங்தொடுவாய் ஆயுர்வேத வைத்தியசாலையில் கடமையாற்றி வென்னப்புவ பிரதேச சபைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த ஆயுர்வேத வைத்தியர் ஒருவருக்கு 2012 ஜுலை மாதம் முதல் 2013 செப்தம்பர் மாதம் வரை 15 மாதங்கள் பிரதேச சபையினால் சம்பளம் செலுத்தியிருக்கும் போதும் ஆயுர்வேத திணைக்களத்தினாலும் என ரூபா 548,376 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் 04 சந்தர்ப்பங்களில் ரூபா 260,000 தொகை மாத்திரம் தவணைகளாக அறவீடு செய்யப்பட்டிருந்தது. மீதியான ரூபா 288,376 தொகை கொடுப்பனவை புறக்கணித்து சுமார் 10 வருட காலம் கடந்திருந்த போதிலும், குறிப்பிட்ட மருத்துவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது நிதிப் பிரமாணம் 104(2) ‘‘ஆ’’ இணங்க பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு மிகை விதிப்பு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த ஆயுர்வேத வைத்தியர் மோசடியான முறையில் சம்பளம் பெற்றுக்கொண்டது தொடர்பாக பகிரங்க சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைக் குழுவினால் ஒழுக்காற்று விசாரணை ஒன்று நடாத்தியிருந்ததுடன், அதன் மூலம் வழங்கப்பட்டிருந்ததன் படி வடமேல் மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழு ஊடாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. | வடமேல் மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் திணைக்களத்தினை வினவாமல் செலுத்தியிருந்த சம்பளம் தொடர்பாக ஒழுக்காற்று அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் திணைக்களத்தினால் செலுத்தியிருந்த சம்பளத்தில் ரூபா 288,376 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தமையால் இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது நிதிப் பிரமாணம் 104(2) ‘‘ஆ’’ இணங்க பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் மிகை விதிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், பணியாளர் கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் சம்பளக் கட்டுப்பாட்டுப் பிரிவு இடையே நாளதுவரை மற்றும் தொடர்ச்சியான ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்துவதற்கான கட்டுப்பாட்டு முறைமையொன்றினை அறிமுகப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்திற்கு சொந்தமான 02 பஸ் வண்டிகள், 02 லொறி வண்டிகள், 09 கப் வண்டிகள், 07 வான் வண்டிகள், 05 மோட்டார் கார்கள், 02 ஜீப் வண்டிகள், 09 நோயாளர் காவு வண்டிகள், 06 முச்சக்கர வண்டிகள் மற்றும் டிரக்டர்கள், மோட்டார் சைக்கிள்கள் உட்பட 55 வாகனங்கள் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது இந்த வாகனங்களுக்கு எரிபொருள் வழங்குதல் மற்றும் திருத்த வேலைகளுக்காக ரூபா 13,172,415 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், இந்த வாகனங்களுக்குரிய சம்பவக் குறிப்பேடுகள் மற்றும் ஓட்ட அட்டவணைகள் முறைப் பிரகாரம் நாளதுவரை பேணப்பட்டிருக்காமை, எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்காமை, சேவைகள் மற்றும் திருத்த வேலைகள் தாமதம் இன்றி செய்யப்படாமை வாகனங்களுக்கு எரிபொருள் நிறப்பும் போது அந்த அலுவல்கள் நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்டிருக்காமை, வாகன விபத்துக்கள் தொடர்பாக பொலிஸிற்கு முறைப்பாடு செய்யாமை, முறைப் பிரகாரம் தாமதம் இன்றி விசாரணைகள் மேற்கொண்டு குறிப்பிட்ட பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் அறவீடு செய்தல் மேற்கொள்ளாமல் காப்புறுதி நட்டஈட்டின் மூலம் நட்டத்தை அணவல் செய்வதற்கு மாத்திரம் ஈடுபட்டிருத்தல் மற்றும் சாரதிகளை முறைகேடுகளை தவிர்த்துக்கொள்வதற்காக போதியளவு கட்டுப்பாட்டு முறைமைகளை கடைபிடிக்கப்படாமை ஆகிய காரணங்களினால் திணைக்களத்தின் வாகன கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு தொடர்பாக திருப்திகரமான நிலைமையொன்று காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | வாகன திருத்த வேலைகள் மற்றும் சேவைகள் மேற்கொள்ளல், தயர்கள் மற்றும் பற்றரிகள் பொருத்துதல் ஆகிய விடயங்கள் சம்பவக் குறிப்பேட்டில் குறிப்பிடப்படுகின்றது என. காணப்படும் ஏற்பாடுகளை முகாமைத்துவம் செய்து வாகனங்களுக்கு தேவையான அத்தியவசியமான திருத்த வேலைகள் மற்றும் சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன என வாகனங்களுக்காக எரிபொருள் நிரப்பும் போது எரிபொருள் கட்டளைகளை ஓட்ட அட்டவணையுடன் பரிசோதனை செய்து நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் கையொப்பமிடப்படுகின்றதென, முழுமையான காப்புறுதி உள்ளடக்கம் காணப்படும் போது அதன் கீழ் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுவதுடன், அவ்வாறின்றேல், முறைப்பாடுகளை பதிவு செய்து சட்ட நடவடிக்கை எடுத்து வழக்குத் தாக்கல் செய்ய வேண்டியிருந்ததுடன், சிறிய மற்றும் ஏனைய தரப்பினருக்கு சேதங்கள் விளைவித்திருக்காத வாகன விபத்துக்களின் போது பொலிஸ் அறிக்கைகள் பெற்றிருக்கவில்லை எனவும் மற்றும் வாகன விபத்துக்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் போது நியமனம் செய்யப்படும் குழுவின் தீர்மானத்தின் படி நி.பி. 104(4) விசாரணை அறிக்கைகளுக்கு இணங்க குறிப்பிட்ட பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தரிடம் அல்லது காப்புறுதி நட்டஈட்டின் மூலம் நட்டத்தை ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரையின் படி கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றது என அவதானிக்கப்படாமையால் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

3.7 தீர்க்கப்பட்டிருக்காத கணக்காயவுப் பந்திகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவைப்பாட்டினை சரியாக இனங் காணாமல் மற்றும் சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ளாமல் 2015 மார்ச் 16 திகதி ரூபா 28 மில்லியன் செலவிடப்பட்டு பண்டாரநாயக ஆயுர்வேத ஆய்வு நிலையத்திற்கு 14 இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 21 மில்லியன் பெறுமதியான 08 இயந்திரங்கள் 2021 ஒக்தோபர் 15 திகதி வரையும் பொறுத்தப்பட்டிருக்கவில்லை. மொத்தக் கிரயம் ரூபா 14,591,311 தொகைக்கான 06 இயந்திரங்கள் உற்பத்திச்சாலைக்கு தேவையில்லை என 2020 ஒக்தோபர் 05 திகதி நியமனம் செய்யப்பட்ட குழுவினால் இனங் கண்டிருந்தது. முறையான ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் சேவை மற்றும் திருத்த வேலைகளுக்கான உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் இந்த ஒப்பந்த வேலை செயற்படுத்தப்பட்டிருந்தமையால் பொறுத்தப்பட்டிருந்த இயந்திர உபகரணங்களும் மீளாய்வண்டளவில் பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்பட்டது. அதன்படி, இந்த செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 28,342,712 இற்கான மொத்த தொகையும் சிக்கனமற்ற செலவொன்றாக காணப்பட்டது. | நாவின்ன ஆயுர்வேத நிறுவனத்தில் காணப்படும் இயந்திரம் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக விஷேடத்துவ குழுவொன்றின் மூலம் விசாரணை ஒன்று மேற்கொண்டு இது தொடர்பான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் படி அமைச்சுச் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றதென. | அனைத்து இயந்திரங்களும் வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கு அல்லது ஆயுர்வேத வைத்தியசாலைகளில் அல்லது ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் மருந்து உற்பத்திக்கு பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், தேவைப்பாட்டினை சரியாக இனங் காணாமல் மற்றும் முறையான சாத்தியக்கூறு ஆய்வொன்றின்றி இந்தக் கொள்வனவுக்காக பங்களிப்புச் செய்த அனைத்து உத்தியோகத்தர்கள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

4 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் 3.6, 3.9, 11 மற்றும் 11.2 பிரிவுகளுக்கு இணங்க நிறுவனத்தின் குறிக்கோளை நெருங்குவதற்காக தமது வளங்களை வினைத்திறனுடன் செயற்படுத்த வேண்டியிருந்ததுடன், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நெருங்குவதற்காக நிறுவனத்தினால் நிறைவேற்ற வேண்டிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நிறைவேற்றுவதற்காக காணப்படும் | கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நெருங்குவதற்குரிய இலக்குகள் மற்றும் சுட்டிகளை இனங் காண்பதற்கு மற்றும் முன்னேற்றத்தை அளவை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

இடைவெளிகளையும், முன்னேற்றத்தை அளவை செய்வதற்காக பொருத்தமான சுட்டிகளை இணங்கான வேண்டும். எனினும், திணைக்களத்தினால் அவ்வாறான சுட்டிகளையும் இனங் கண்டு குறிக்கோள்களில் நெருங்கும் எண்ணிக்கை மற்றும் விலகியிருத்தல் போலவே கவனம் செலுத்தப்பட வேண்டிய பல்வேறு துறைகளை இனங் கண்டிருக்கவில்லை.

5 மனிதவள முகாமைத்துவம

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) திணைக்களத்திற்காக முகாமைத்துவ தரவு முறைமை ஒன்று தயாரித்து செயற்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2022 ஆகஸ்ட் மாதம் இறுதி வரையும் குறிப்பிட்ட தரவு முறைமை நிறுவப்பட்டிருக்கவில்லை. அதன்படி, திணைக்களம் மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்கள், வைத்தியசாலைகள், வைத்திய நிலையங்கள் உட்பட முழுமையான தாபன முறைமைக்குரிய நாளதுவரை ஆக்கப்பட்ட முகாமைத்துவ தகவல்கள் செயற்திறனுடன் பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் காணப்பட்டதுடன், திணைக்களத்தின் பதவியணியினரின் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லலை பதிவு செய்யும் கட்டுப்பாடு, செயலாற்றுகை கட்டுப்பாடு, சம்பளக் கட்டுப்பாடு, மேலதிக நேரச் செலவுக் கட்டுப்பாடு, தனிப்பட்ட கோவைகளின் கட்டுப்பாடு ஆகிய கட்டுப்பாடுகள் பலவீன மட்டத்தில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமையின் காரணமாக இது தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டது எனவும் மற்றும் தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக பொருத்தமான வேலைத் திட்டமொன்று விரைவாக தயாரிக்கப்படும் எனவும். | திணைக்களத்தின் தலைமை அலுவலக வளாகம், வைத்தியசாலைகள், மூலிகைத் தோட்டங்கள், சமூக சுகாதார பிராந்திய அலுவலகங்கள் ஆகிய அனைத்து பிரிவுகளின் அலுவல்களையும் தொடர்புபடுத்தக் கூடிய விதமாக முகாமைத்துவ தரவு முறைமை ஒன்று நிறுவப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 2,647 தொகை எனினும், அத் தினத்தில் உள்ளவாறு உள்ளவாறான பதவியணி 1,939 தொகையாக காணப்பட்டமையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 27 சதவீதத்துக்கு சமமான வெற்றிட எண்ணிக்கை 708 ஆகும். இந்த வெற்றிடங்களில் சிரேஷ்ட மட்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 830 இல் 663 எனப்படும் 80 சதவீதம் வெற்றிடமாக காணப்படல் திணைக்களத்தைப் போலவே அதன் கீழ் காணப்படும் வைத்தியசாலைகளின் செயலாற்றலுக்கு தீவிர தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது. மேலும், பதவியணியினரின் 10 சதவீதத்துக்கு சமனான 260 பேர் அமைய, தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | ஆரம்பத் தரத்தின் வைத்திய உத்தியோகத்தர் பதவி மற்றும் தாதி உத்தியோகத்தர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரம் வேண்டப்பட்டுள்ளது எனவும் மற்றும் புதிய ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு இதுவரை அங்கீகாரம் வழங்கியிருக்கவில்லை என. | சிரேஷ்ட மட்டத்தின் பதவிகள் மற்றும் வைத்தியசாலைகளின் அத்தியவசிய பதவிகளுக்கு முக்கியத்துவமளித்து காணப்படும் மனிதவளத்தை உச்சமட்ட உற்பத்தி திறனொன்றினை பெற்றுக்கொள்வதற்காக பதவியணி மீளமைபொன்று மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் விஷேட தர வைத்திய உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ள வேண்டிய 18 பதவிகள் திணைக்களத்தில் காணப்பட்ட போதிலும் அவற்றில் 02 பதவிகளுக்காக மாத்திரம் நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், 09 பதவிகளில் கடமை அனவல் செய்தல் மற்றும் தற்காலிக அடிப்படையின் மீது நியமனம் வழங்கப்பட்டிருந்தது. மீதியான 06 பதவிகள் 2022 மே 30 திகதி வரை வெற்றிடமாக காணப்பட்டது. | விஷேட தரத்திற்கு பதவியுயர்வு பெற்று ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் சேவை நிலையங்களுக்கு அனுப்புவதற்கு தேவையான தகவல்கள் இராஜாங்க அமைச்சு மற்றும் பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அப் பதவிகளுக்கான நியமனங்கள் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், கடமையை அணவல் செய்வதற்காக பொருத்தமான உத்தியோகத்தர்கள் உரிய பதவிகளுக்கு இணைக்கப்பட்டுள்ளது என. | விஷேட தர மருத்துவ உத்தியோகத்தர்கள் காணப்படும் போது அந்த உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பதவிகளுக்கு குறைந்த தரத்திலுள்ள உத்தியோகத்தர்கள் கடமைகளை அணவல் செய்தல் மற்றும் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்தல் மேற்கொள்ளப்படக்கூடாது. |